*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC**.328/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW**-1(**LW**-1)*

*Name / Father's Name:* **திரு.ஈஸ்வரன் த/பெ.கோவிந்தன்**

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.08.2023.*

துவக்க நேரம் 11.11

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கருமந்துறையில் உள்ள சின்னமாங்கோடு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது உறவினர்கள் தான். எதிரி சடையன் எனது பெரியப்பா ஆவார். நாங்களும், எதிரிகளும் கூட்டுக்குடும்பமாக இருந்து பூர்வீக நிலத்தினை ஒன்றாக அனுபவித்து வந்தோம். அது தொடர்பாக அடிக்கடி எங்களுக்குள் பிரச்சனை இருந்து வந்தது.

2) இந்நிலையில், கடந்த 28.01.2021 ம் தேதி மாலை 04.00 மணியளவில் நான் எனது காட்டில் மாட்டிற்கு பால் கறந்து கொண்டிருந்தபோது எதிரி லட்சுமணன் வந்து சண்டை போட்டு என்னை கல்லாலும், கட்டையாலும் அடித்துவிட்டார். பின்னர் அங்கு வந்த எதிரிகள் வெங்கடேசன், சடையன் ஆகியோர்களும் சேர்ந்துகொண்டு என்னை அடித்தார்கள்.

3) தடுக்க வந்த எனது அண்ணன் லட்சுமணனையும் எதிரிகள் அடித்துவிட்டார்கள். நாங்கள் வீட்டிற்குள் சென்று கதவை சாத்திக்கொண்டோம். அப்போது எதிரிகள் கல்லைக்கொண்டு அடித்து வீட்டின் மேல்கூரை சிமெண்ட்சீட்டையும் உடைத்துவிட்டார்கள். பின்னர் எங்களுக்கு கொலைமிரட்டல் விடுத்து அங்கிருந்து சென்றுவிட்டார்கள்.

4) சம்பவத்தில் எனது அண்ணனுக்கும், எனக்கும் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சைக்காக நாங்கள் கருமந்துறை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம்.

5) நான் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த கருமந்துறை போலிசார் என்னிடம் விசாரித்து, புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **எனது புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1** ஆகும். நடந்த சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) நிலம் சம்மந்தமாக எங்களுக்கும், எதிரிகளுக்குமிடையே ஆத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எங்களுக்கு எதிராக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) சம்பவ தினத்தில் எதிரிகளை, நானும், எனது அண்ணன், அப்பா ஆகியோர்களும் அடித்துவிட்டதாக எங்கள்மீதும் கருமந்துறை காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டு, CC.No.216/2021-ஆக இந்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கு பொய் வழக்கு ஆகும்.

3) சம்பவம் நடைபெற்றவுடன் கருமந்துறை காவல் நிலையத்திற்கு சென்று புகாரினை கொடுத்துவிட்டு, பின்னர்தான் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். வீட்டின் எந்த பகுதியில் சேதமடைந்தது என்று குறிப்பிட்டு சொல்லாமல் வீட்டில் சேதமடைந்தது என்று பொதுவாகத்தான் புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4) புகார் வாக்குமூலத்தில் என்ன விவரம் எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, என்னிடம் படித்து காட்டி தான் கையெழுத்து வாங்கினார்கள். உண்மையில் நாங்கள்தான் எதிரிகளை அடித்துவிட்டோம் என்றும், அந்த வழக்கிலிருந்து தப்பிக்கவும், ஏற்கனவே உள்ள சிவில் வழக்கில் எதிரிகளை மிரட்டவும் வேண்டி, என்னையும், எனது அண்ணனையும் எதிரிகள் அடித்ததாகவும், எங்கள் வீட்டின் சிமெண்ட் அட்டையை உடைத்ததாகவும் சொல்லி பொய்யான புகாரினை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், நடந்ததாக சொல்லும் சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 11.31

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC**.328/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW**-2(**LW**-2)*

*Name / Father's Name: **திரு.லட்சுமணன் த/பெ.கோவிந்தன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.08.2023.*

துவக்க நேரம் 11.32

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கருமந்துறையில் உள்ள சின்னமாங்கோடு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது உறவினர்கள் தான். எதிரி சடையன் எனது பெரியப்பா ஆவார். அ.சா.1 ஈஸ்வரன் எனது தம்பி ஆவார். நாங்களும், எதிரிகளும் கூட்டுக்குடும்பமாக இருந்து பூர்வீக நிலத்தினை ஒன்றாக அனுபவித்து வந்தோம். அது தொடர்பாக அடிக்கடி எங்களுக்குள் பிரச்சனை இருந்து வந்தது.

2) இந்நிலையில், கடந்த 1 1/2 வருடங்களுக்கு முன்பாக, தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒருநாள் மாலை 04.00 மணியளவில் நான் கோவிலுக்கு சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வந்தபோது ஆஜர் எதிரிகள் வெங்டேசன், சடையன், லட்சுமணன் ஆகியோர்கள் எனது தம்பியை அடித்துக்கொண்டிருந்தார்கள்.

3) நான் சென்றவுடன் என்னை பார்த்து தேவடியா பையலே நீயும் வந்துவிட்டாயா என்று சொல்லி என்னையும் அடித்தார்கள். அதில் லட்சுமணன் கல்லால் எனது வலது பக்க காதின் அருகே அடித்துவிட்டார். வெங்கடேஷ் கட்டையால் எனது பின்கழுத்தில் அடித்துவிட்டார். நான் மயங்கி விழுந்துவிட்டேன். பின்னர் மயக்கம் தெளிந்தவுடன் சிகிச்சைக்காக நானும், எனது தம்பியும் கருமந்துறை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக ஆத்துார் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். நடந்த சம்பவம்

குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) நிலம் சம்மந்தமாக எங்களுக்கும், எதிரிகளுக்குமிடையே ஆத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

2) சம்பவ தினத்தில் எதிரிகளை, நானும், எனது தம்பியும், அப்பாவும் அடித்துவிட்டதாக எங்கள்மீதும் கருமந்துறை காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டு, CC.No.216/2021-ஆக இந்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கு பொய் வழக்கு ஆகும்.

3) சம்பவம் நடைபெற்றவுடன் கருமந்துறை காவல் நிலையத்திற்கு சென்று புகாரினை கொடுத்துவிட்டு, பின்னர்தான் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். யார் புகாரை கொடுத்தீர்கள் என்றால் நான்தான் கொடுத்தேன். உண்மையில் கருமந்துறை மருத்துவமனையில் நாங்கள் சிகிச்சைக்கு சேரவில்லை என்றால் சரியல்ல. ஆத்தூர் மருத்துவமனை மருத்துவரிடம் என்னை கட்டையால் அடித்ததாக நான் சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

4) உண்மையில் நாங்கள்தான் எதிரிகளை அடித்துவிட்டோம் என்றும், அந்த வழக்கிலிருந்து தப்பிக்கவும், ஏற்கனவே உள்ள சிவில் வழக்கில் எதிரிகளை மிரட்டவும் வேண்டி, என்னையும், எனது தம்பியையும் எதிரிகள் அடித்ததாகவும், எங்கள் வீட்டின் சிமெண்ட் அட்டையை உடைத்ததாகவும் சொல்லி பொய்யான புகாரினை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், நடந்ததாக சொல்லும் சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 11.44

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC****.328/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW****-3 (****LW****-3)*

*Name / Father's Name:* ***திரு.கோவிந்தன் த/பெ.ராமகவுண்டர்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.08.2023.*

துவக்க நேரம் 11.45

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கருமந்துறையில் உள்ள சின்னமாங்கோடு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது உறவினர்கள் தான். எதிரி சடையன் எனது அண்ணன் ஆவார். அ.சா.1 ஈஸ்வரன், அ.சா.2 லட்சுமணன் ஆகியோர்கள் எனது மகன்கள் ஆவார்கள். நாங்களும், எதிரிகளும் கூட்டுக்குடும்பமாக இருந்து பூர்வீக நிலத்தினை ஒன்றாக அனுபவித்து வந்தோம். அது தொடர்பாக அடிக்கடி எங்களுக்குள் பிரச்சனை இருந்து வந்தது.

2) இந்நிலையில், கடந்த 1 1/2 வருடங்களுக்கு முன்பாக, தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒருநாள் மாலை 04.00 மணியளவில் நான் வெளியே காட்டு வேலை சம்மந்தமாக சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வந்தபோது ஆஜர் எதிரிகள் வெங்டேசன், சடையன், லட்சுமணன் ஆகியோர்கள் எனது மகன்களை அடித்துவிட்டதாக என்னிடம் எனது மகன்கள் சொன்னார்கள்.

3) நான் நடந்த சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. நடந்த சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) நிலம் சம்மந்தமாக எங்களுக்கும், எதிரிகளுக்குமிடையே ஆத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

2) சம்பவ தினத்தில் எதிரிகளை, நானும், எனது மகன்களும்

அடித்துவிட்டதாக எங்கள்மீதும் கருமந்துறை காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டு, CC.No.216/2021-ஆக இந்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கு பொய் வழக்கு ஆகும்.

3) உண்மையில் நாங்கள்தான் எதிரிகளை அடித்துவிட்டோம் என்றும், அந்த வழக்கிலிருந்து தப்பிக்கவும், ஏற்கனவே உள்ள சிவில் வழக்கில் எதிரிகளை மிரட்டவும் வேண்டி, எனது மகன்களை எதிரிகள் அடித்ததாகவும், எங்கள் வீட்டின் சிமெண்ட் அட்டையை உடைத்ததாகவும் சொல்லி பொய்யான புகாரினை எனது மகன் ஈஸ்வரன் மூலமாக கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் கேள்விபட்டதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும், நடந்ததாக சொல்லும் சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.01

ஓம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.